செ.வெ.எண்:17 நாள்:08.11.2021

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வாக்குச்சாவடி வரைவு பட்டியல்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் கருத்துக் கேட்பு கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆப., அவர்கள் தலைமையில் இன்று (08.11.2021) நடைப்பெற்றது.**

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நகர்புற உள்ளாட்சி அமைப்பு தேர்தலையொட்டி, வரைவு வாக்குச்சாவடி பட்டியலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப., அவர்கள் அனைத்து கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் வெளியிட்டார்.**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற உள்ள நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2021 தொடர்பாக வாக்குச்சாவடிகள் வரைவு பட்டியல்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வெளியிடப்பட்டது. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான வாக்குச்சாவடி வரைவு பட்டியல்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி அலுவலகங்களிலும், ஒவ்வொரு வார்டிலும் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களால் 08.11.2021 அன்று விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண். | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு | வார்டுகள் எண்ணிக்கை | வாக்குச்சாவடி விவரம் | | | | மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | அனைத்து வாக்காளர் | மொத்தம் | |
| 1. | மாநகராட்சி ஒசூர் | 45 | 81 | 81 | 86 | 248 | 217292 |
| 2. | நகராட்சி கிருஷ்ணகிரி | 33 | 27 | 27 | 12 | 66 | 55431 |
| | **பேரூராட்சிகள்** | | | | | | |
| 1. | பர்கூர் | 15 | 1 | 1 | 14 | 16 | 14436 |
| 2. | காவேரிப்பட்டிணம் | 15 | 3 | 3 | 12 | 18 | 13348 |
| 3. | நாகோஜனஹள்ளி | 15 | 0 | 0 | 15 | 15 | 8321 |
| 4. | ஊத்தங்கரை | 15 | 3 | 3 | 12 | 18 | 15576 |
| 5. | தேன்கனிக்கோட்டை | 18 | 10 | 10 | 8 | 28 | 21281 |
| 6. | கெலமங்கலம் | 15 | 0 | 0 | 15 | 15 | 11730 |
| பேரூராட்சிகள் மொத்த வாக்காளர் | | 93 | 17 | 17 | 76 | 110 | 84692 |

இந்நிகழ்ச்சியில், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.வெங்கடாசலம், தனி வட்டாட்சியர் (தேர்தல்) திரு.ஜி.ஜெயசங்கர், வட்டார வளர்ச்சி அலுவலர் (தேர்தல்) திருமதி.சுபாராணி, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி அலுவலர்கள் மற்றும் அனைத்து கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.